# Tnpsc Model Question Paper 9 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. குறைந்த செலவில் உருவாக்கப்படும் ஆற்றல் ------------ ஆகும்
(அ) காற்று ஆற்றல் **(ஆ) நீர்மின் ஆற்றல்**
(இ) அணுக்கரு ஆற்றல (ஈ) சூரிய ஆற்றல்

2. மோட்டார் வாகனங்களில் அதிர்வு தாங்கிகள் பொருத்தப்படுவது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது
(அ) நியூட்டனின் ஈர்ப்பியல் விதி (ஆ) நியூட்டனின் முதல் விதி
(இ) நியூட்டனின் மூன்றாவது விதி **(ஈ) கணத்தாக்கு**

3. கீழ்க்கண்டவற்றுள் எவை மலேரியா நோயை உண்டாக்கும் ஒட்டுண்ணி
(அ) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (ஆ) பி.மலேரியா
(இ) பி.ஃபால்சிபாரம் **(ஈ) இவை அனைத்தும்**

4. வயிற்றில் உண்டாகும் அமிலத்தன்மை அதிகரிக்கும் உபாதையை நீக்கப் பயன்படும் அமில முறிவுப் பொருளின் முக்கிய மூலப்பொருள் ------------------ ஆகும்.
(அ) அமிலம் **(ஆ) காரம்** (இ) நடுநிலை கரைசல் (ஈ) வீரிய அமிலம்

5. பௌதீக மற்றும் காலநிலை தேவைகளுக்கு அத்தியாவசியமான காடுகள்
**(அ) பாதுகாக்கப்பட்ட காடு** (ஆ) தேசிய காடு (இ) கிராம காடு (ஈ) மர நிலங்கள்

6. 2011ல் இந்தியாவில் தனி நபருக்குக் கிடைத்த நீரின் அளவு என்ன?
**(அ) 1545 கன மீட்டர்** (ஆ) 1515 கன மீட்டர்
(இ) 1673 கன மீட்டர் (ஈ) 1860 கன மீட்டர்

7. அரசியல் கட்சிகள், வாக்காளர்களுக்கும் அரசாங்கத்திற்க்கும் இடையேயான சமூக சிந்தனையை எடுத்து செல்லும் நீர்க்குழாய் போன்றவை என ஒப்பிட்டவர் யார்?
**(அ) பார்கர்** (ஆ) சர்தாமஸ்மோர்
(இ) டி.எச்.கிரீன் (ஈ) ஹெர்பர்ட் ஸ்பென்சர்

8. "நிதி கூட்டாட்சி" என்பதன் மிக முக்கியமான அம்சம் என்பது இதனை நடைமுறைக்கு கொண்டு வருவதாகும்
**(அ) சிக்கனத் திறன்** (ஆ) நேர்மை (இ) தார்மிகம் (ஈ) நிர்வாகத் திறன்

9."சீன நீர் குண்டு" திட்டம் (அணை) இந்நதியின் மீது கட்டப்படுவதால், இந்தியாவுக்கு ஆபத்து உண்டாக்கும்
(அ) சிந்து நதி (அ) யாங்ட்ஸி நதி
**(இ) பிரம்மபுத்ரா நதி** (ஈ) ஹீவாங் ஹோ நதி

10. மகமது கவான் எந்த குற்றத்துக்காக கொல்லப்பட்டார்
(அ) கொலை (ஆ) நடத்தை–விபச்சாரம்
**(இ) போலியான தேசத்துரோக குற்றச்சாட்டு** (இ) திருட்டு

11. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, தனது முதல் தொழில்கலையை சூரத்தில் எந்த முதலாயப் பேரரசருடைய அனுமதியின் பேரில் தொடங்கியது?
(அ) அக்பர் **(ஆ) ஜஹாங்கீர்** (இ) ஷாஜஹான் (ஈ) ஹீமாயூன்

12. பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டு குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையினை அட்டவணை–I உடன் அட்டவணை–II ஐ பொருத்துக:
அட்டவணை–I அட்டவணை–II

பயணிகள்
(அ) நிக்கோலோ–டி–காண்டி
(ஆ) டோமிங்கோ பயஸ்
(இ) பெர்னோ நுன்ஸ்
(ஈ) அப்துல் ரசாக்

விசயநகர ஆட்சியாளர்கள்
1. கிருஷ்ண தேவராயர்
2. தேவராயர்–II
3. தேவராயர்–I
4. அச்சுத ராயர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 4 | 2 |
| ஆ | 1 | 4 | 2 | 3 |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| **ஈ.** | **2** | **1** | **4** | **3** |

13. செயற்கை செங்கல் கப்பல் துறைமுகம் கொண்ட ஒரே சிந்துசமவெளி நகரத்தின் பெயர்
**(அ) லோத்தல்** (ஆ) கலிபங்கன் (இ) சான்குதாரோ (ஈ) சர்கோடோடா

14. துணை குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவராக செயல்பட்டு கொண்டிருக்கும் பொழுது அவரை பதவி நீக்கம் செய்யும் முறை யாது?
(அ) கீழவையில் தீர்மானம் இயற்றுவதன் மூலம்
(ஆ) இந்திய தலைமை நீதிபதியின் அனுமதி கிடைத்தவுடன்
(இ) இந்திய தலைமை வழக்குரைஞரின் அனுமதி கிடைத்தவுடன்
**(ஈ) குடியரசுத் தலைவர பதவி நீக்கம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட அதே முறை**

15. இந்திய அரசியலமைப்பின் பாதுகாவலனாக விளங்கக்கூடியது
**(அ) உச்ச நீதிமன்றம்** (ஆ) அரசியலமைப்பு நிர்ணயசபை
(இ) பாராளுமன்றம் (ஈ) குடியரசுத் தலைவர்

16. மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?
(அ) 1963 (ஆ) 1949 (இ) 1959 **(ஈ) 1969**

17. எந்த சூழ்நிலையில் ஒருவரது இந்திய குடியுரிமையை நீக்க முடியாது?
(அ) அவசர நிலை அமலில் உள்ள போது **(ஆ) போர் நடந்து கொண்டிருக்கும் போது**
(இ) தேர்தல் நடைபெறும் போது (ஈ) மேலே உள்ள அனைத்தும்

18. கீழ்குறிப்பிடப்பட்டவர்களுள், இந்திய அரசியலமைப்பின் முன்னுரை தான், அரசியலமைப்பின் முக்கிய குறிப்பு என்று கூறியது யார்?
**(அ) எர்னஸ்ட் பார்க்கர்** (ஆ) ஜவஹர்லால் நேரு
(இ) Dr.B.R.அம்பேத்கர் (ஈ) நெல்சன் மண்டேலா

19. "NABARD" தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
**(அ) 1982** (ஆ) 1983 (இ) 1984 (ஈ) 1985

20. பதினைந்தாவது நிதி ஆணையத்தின் தலைவர்
(அ) ரமேஷ் சந்த் **(ஆ) N.K.சிங்** (இ) Y.V.ரெட்டி (ஈ) அசோக் லஹிரி

21. தவிர்க்க இயலாத நிலை அல்லது கட்டாயமாகும் திட்டமிடுதல் இவ்வாறும் அழைக்கப்படலாம்.
(அ) குறிக்கும் திட்டமிடல் (ஆ) நெறிமுறை திட்டமிடல்
**(இ) இலக்கு திட்டமிடல்** (ஈ) அமைப்பு திட்டமிடல்

22. இந்தியாவில் தாராளமயக் கொள்கை செயல்பாடுகள் எந்த குழுவின் கீழ் இயங்கியது?
(அ) விஸ்வேஸ்ரய்யா குழு (ஆ) நரசிம்மம் குழு (இ) ஹசாரி குழு **(ஈ) டட் குழு**

23. ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்த ஆண்டு

(அ) 11 ஏப்ரல் 1918 (ஆ) 27 மே 1918 **(இ) 13 ஏப்ரல் 1919** (ஈ) 30 மே 1920

24. கூற்று (A): 1929 இன் பிற்பகுதியில் உருவான உலகளாவிய மந்தநிலை இந்தியாவையும் பாதித்தது.
காரணம் (R): குறிப்பாக விவசாயப் பொருட்களின் விலைகளில் மிகக் கடுமையான வீழ்ச்சி மற்றும் ஒட்டுமொத்த ஏற்றுமதி சார்ந்த காலனித்துவப் பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடியைக் கொண்டு வந்தது
(அ) (A) சரி, ஆனால் (R) தவறு
**(ஆ) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி மற்றும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமாகும்.**
(இ) (A) தவறு, ஆனால் (R) சரி
(ஈ) (A) மற்றும் (R) ஆகிய இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல

25. "இந்திய தொண்டர் சங்கத்தை" தொடங்கியவர்
(அ) மகாத்மா காந்தி **(ஆ) கோபால கிருஷ்ண கோகலே**
(இ) சுபாஷ் சந்திர போஸ் (ஈ) தாதாபாய் நௌரோஜி

26. ராஜ்மஹால் பகுதியில் "டொமின்–இ–கோ" என்றால் என்ன?
(அ) கோல் இனத்தரின் இடம் (ஆ) முண்டோ இனத்தரின் இடம்
**(இ) சந்தால் இனத்தரின் இடம்** (ஈ) மலபாரின் ஒரு பகுதி

27. சென்னை மாகாணத்தின் நீதிக்கட்சியிலிருந்து முதல் அமைச்சராக இருந்தவர்
(அ) பொப்பிலி அரசர் (ஆ) பனகல் அரசர் (இ) ராஜன் **(ஈ) சுப்பாராயலு**

28. கீழ்வருவனவற்றுள் மாறுபாடான ஒன்றை கண்டுபிடி:
(அ) கட்டபொம்பன் கும்பி பாடல் (ஆ) கான் சாகிப் சண்டை
(இ) கட்டபொம்மன் கூத்து **(ஈ) நந்தனர் சரித்திர கீர்த்தனைகள்**

29."அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல" – இவ்வுவமை உணர்த்தும் பொருள்
**(அ) பொறையுடைமை** (ஆ) ஒழுக்கமுடைமை (இ) நட்புடைமை (ஈ) அறிவுடைமை

30. தமிழின் முதல் சென்ரியூ தொகுப்பான "ஒரு வண்டி சென்ரியூ" என்னும் நூலின் ஆசிரியர் யார்?
**(அ) ஈரோடு தமிழன்பன்** (ஆ) அப்துல் ரகுமான்
(இ) அறிவுமதி (ஈ) மீரா

31. "கிழக்கின் டிராய்" என அழைக்கப்படுவது
(அ) வேலூர் கோட்டை **(ஆ) செஞ்சிக் கோட்டை**
(இ) தரங்கம்பாடி கோட்டை (ஈ) சிவகங்கை கோட்டை

32. ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
– அடுத்த வரிகள்
(அ) அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை
**(ஆ) பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
(இ) அறிவெனப்படுவது பேதையர் சொல் நோன்றல்
(ஈ) செறிவெனப்படுவது கூறியது மறாஅமை

33. பின்வரும் நூல்களில் பதினெண் மேற்கணக்கு வகையைச் சேர்ந்தது எது?
(அ) திருக்குறள் **(ஆ) திருமுருகாற்றுப்படை**
(இ) திருப்பாவை (ஈ) திருத்தொண்டர் புராணம்

34. சங்க காலத்தின் சமுதாயத்தில் நிலவி வந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்தை எடுத்துக் கூறுவது
**(அ) தொல்காப்பியம்** (ஆ) எட்டுத்தொகை
(இ) பத்துப்பாட்டு (ஈ) பதினெண் கீழ்கணக்கு

35. 2019–2020 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பட்ஜெட்டில் TANGEDCO பின்வரும் மாவட்டங்களில் மிதக்கும் சூரிய மின் திட்டத்தை நிறுவும்.

(அ) தேனி

(ஆ) நீலகிரி

(இ) ஈரோடு

(ஈ) சேலம்

சரியான விடையை குறியீடுகளைப் பயன்படுத்தி தெரிவு செய்க:

(அ) (அ) மற்றும் (ஆ) (ஆ) (அ), (ஆ) மற்றும் (இ)

(இ) (அ), (ஆ) மற்றும் (ஈ) **(ஈ) (அ), (இ) மற்றும் (ஈ)**

36. பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டு குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையினை அட்டவணை–I உடன் அட்டவணை–IIஐ பொருத்துக.

| அட்டவணை–I | அட்டவணை–II |
|---|---|
| (அ) வறுமை ஒழிப்புத் திட்டம் | 1. மதிய உணவு |
| (ஆ) மக்கள் மேம்பாட்டுத் திட்டம் | 2. இந்திரா ஆவாஸ் யோஜனா |
| (இ) சமூக உதவித் திட்டம் | 3. தேசிய முதியோர் பென்ஷன் |
| (ஈ) அடிப்படைத் தேவைகள் திட்டம் | 4. MGNREGA |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **3** | **2** |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| இ. | 3 | 4 | 1 | 2 |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

37. பொருத்துக:

| | |
|---|---|
| அ. இறையாண்மை | 1. எல்லா வித வேற்றுமையையும் தகர்க்க சமூக மாற்றத்தை உருவாக்குதல் |
| ஆ. பொது நலக்கோட்பாடு | 2. மக்களால், மக்களுக்காக, மக்களாகவே செய்யும் ஆட்சி |
| இ மதச்சார்பற்ற | 3. ஏந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்ற பறைசாற் சுதந்திரம் |
| ஈ. ஜனநாயகம் | 4. முற்றிலும் அரசியல் சுதந்திரம் மற்றும் இறை அதிகாரம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **3** | **2** |
| ஆ | 2 | 1 | 4 | 3 |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

38. வலியுறுத்தல் (A): சமூக பொருளாதார வளர்ச்சிக் கொள்கையானது வருவாய்–நுகர்வு மறுபங்கீடு செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டிருக்க வேண்டும்

காரணம் (R): உற்பத்தியால் மட்டுமே கணிசமான வறுமை குறைப்பு சாத்தியமாகும். அது ஏழை பிரிவு மக்களுக்கு சாதகமாக வருவாய் மறுபகிர்வு செய்ய உதவும்.

**(அ) (A) மற்றும் (R) இரண்டும் உண்மை, ஆனால் (R) என்பது (A)–வினுடைய சரியான விளக்கமல்ல**

(ஆ) (A) என்பது உண்மை ஆனால் (R) என்பது தவறு

(இ) (A) என்பது தவறு ஆனால் (R) என்பது உண்மை

(ஈ) (A) மற்றும் (R) இரண்டும் உண்மை, மற்றும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமாகும்

39. மனோகர் என்பவர் ரூ.4, 500 க்கு ரூ.750 வீதம் 2 வருடங்களுக்கு வட்டி செலுத்துகிறார் எனில் அவர் செலுத்திய வட்டி வீதம் என்ன?

(அ) 8% **(ஆ) 8 1/3%** (இ) 8 2/3% (ஈ) 8 ¾%

40. x + 6, x + 12 மற்றும் x + 15 என்பன ஒரு பெருக்குத் தொடர் வரிசையின் தொடர்ச்சியான மூன்று உறுப்புகள் எனில் ன் மதிப்பைக் காண்க.

(அ) –78 **(ஆ) –18** (அ) –12 (ஈ) –6

41. 16, 11, 6, 1------- என்ற தொடர் வரிசையில் –54 என்பது எத்தனையாவது உறுப்பு?
(அ) 16 (ஆ) 19 (இ) 14 **(ஈ) 15**

42. இராமனின் வயது அவருடைய இரு மகன்களுடைய வயதுகளின் கூடுதலைப்போல் மூன்று மடங்காகும். ஐந்தாண்டுகள் கழித்து அவரின் வயது தனது மகன்களுடைய வயதுகளின் கூடுதலைப்போல் இரு மடங்காகும் எனில் இராமனின் தற்போதைய வயது என்ன?
**(அ) 45** (ஆ) 55 (இ) 65 (ஈ) 70

43. கோடிட்ட இடத்தை நிரப்புக:
4, 5, 9, 18, 34--------------
**(அ) 59** (ஆ) 50 (இ) 49 (ஈ) 43

44. இவற்றில் பொருத்தமற்றது எது?
CFD, GJH, VYM, JMK
(அ) CFD (ஆ) GJH **(இ) VYM** (ஈ) JMK

45. ரூ.8, 000 க்கு 10% வட்டி வீதம் எனில் இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்க.
**(அ) ரூ.80** (ஆ) ரூ.90 (இ) ரூ.70 (ஈ) ரூ.100

46. ஒரு இயந்திரத்தின் மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் 5% குறைகிறது. ஒருவர் இதை வாங்குவதற்கு ரூ.30, 000 கொடுத்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இதன் மதிப்பு என்ன?
**(அ) ரூ.25, 721** (ஆ) ரூ.25, 722 (இ) 27, 521 (ஈ) 22, 752

47. ஒரு விவசாயியிடம் 144 வாத்துகளுக்கு 28 நாட்களுக்கு தேவையான உணவு உள்ளது. அவர் 32 வாத்துக்களை விற்றுவிட்டார் எனில் அவரிடம் உள்ள உணவு மீதமுள்ள எத்தனை நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும்?
(அ) 84 **(ஆ) 36** (இ) 72 (ஈ) 68

48. 11 : x : : 6 : 66 என்ற விகித சமத்தில் x–ன் மதிப்பு காண்க:
(அ) 6 (ஆ) 11 **(இ) $11^2$** (ஈ) $6^2$

49. $x^3 - x^2 + x - 1$ மற்றும் $x^4 - 1$ இவற்றின் மீ.பொ.வ. காண்க:
(அ) $(x^2 + 1)(x^2 - 1)$ (ஆ) $(x^2 - 1)(x+1)$ (இ) $(x^2+1)(x-1)^2$ **(ஈ) $(x^2+1)(x-1)$**

50. 513 மற்றும் 1134–ன் மீப்பெரு பொதுக்காரணியைக் காண்க:
(அ) 9 (ஆ) 81 **(இ) 27** (ஈ) 31

51. பின்வரும் தனிமங்களில், ஒரு அணுக்கரு உலையில் கட்டுப்பாட்டுத் தண்டுகள் செய்யப்பயன்படுவது எது?
(அ) சோடியம் **(ஆ) காட்மியம்** (இ) பொட்டாசியம் (ஈ) இரும்பு

52. நிலம் மற்றும் கடல் காற்று மற்றும் வியாபார காற்று இதனால் உருவாகிறது -----------
**(அ) வெப்பச்சலனம்** (ஆ) வெப்பக்கடத்தல் (இ) வெப்ப கதிர்வீச்சு (ஈ) சிதறல்

53. எதிர்கால உற்பத்தி செய்தலில் முப்பரிமான அச்சு முறை மரபு சார்ந்த உற்பத்தியைக் காட்டிலும் விரும்பப்படுகிறது எதனால்?
(அ) விலை குறைவு (ஆ) தரம் மற்றும் விரைவான விற்பனை
(இ) குறைந்த கழிவு **(ஈ) இவை எல்லாம்**

54. இராணித்தேனீயின் அதிகபட்ச வாழ்வுக்காலம்
(அ) 24 வருடம் (ஆ) 21 வருடம் (இ) 15 வருடம் **(ஈ) 5 வருடம்**

55. இந்தியாவில் பழங்குடிகளில் ------------- இதில் எந்த பழங்குடி இடம்பெறாது.
(அ) திராவிடியன் பழங்குடி (ஆ) மங்கலாய்டு பழங்குடி
(இ) துர்கியோ-இரானியன் பழங்குடி **(ஈ) ஆஸ்டோலாய்டு பழங்குடி**

56. இரண்டாவது பசுமை புரட்சியின் முக்கிய நோக்கம்:
(அ) உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக விவசாய உற்த்தித் திறனை உயர்த்துவது
(ஆ) நிலையான விவசாயத்தை மேம்படுத்துவதற்காக
(இ) விவசாயிகளின் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க
**(ஈ) மேற்கூறிய அனைத்தும்**

57. பின்வருவனவற்றுள் இந்தியாவில் குறைந்த அளவு மழைப்பொழிவினை பெறும் பிரதேசம் எது?
(அ) மேற்கு மத்தியப்பிரதேசம் **(ஆ) மேற்கு இராஜஸ்தான்**
(இ) கிழக்கு மத்தியப்பிரதேசம் (ஈ) ஒரிசா

58. சர்வதேச மகளிர் தினம் 19-ஆம் தேதி மார்ச் மாதம் முதல் முறையாக எந்த வருடம் கொண்டாடப்பட்டது?
**(அ) 1911** (ஆ) 1913 (இ) 1916 (ஈ) 1921

59. "பறக்கும் சீக்கியர்" என்று பிரபலமாக அறியப்படும் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்
(அ) மனோஜ் சிங் **(ஆ) மில்கா சிங்** (இ) மித்ரா சிங் (ஈ) மதன் சிங்

60. "தெலுங்கானா" என்ற பெயர் எந்த வார்த்தையை குறிக்கிறது.
**(அ) திரிலிங்கா தேசம்** (ஆ) தெலுங்கு தேசம் (இ) மலை தேசம் (ஈ) திரிபுரா தேசம்

61. தற்போதைய தெலுங்கானா மாநில கவர்னர் யார்?
**(அ) தமிழிசை சௌந்தர்ராஜன்** (ஆ) தமிழ் செல்வி
(இ) சௌந்தர்ராஜன் (ஆ) கண்ணய்யா

62. கோட்டை இல்லாத ஒரே சிந்துசமவெளி நகரம் எது?
**(அ) சான்குதாரோ** (ஆ) லோத்தல் (இ) கலிபங்கன் (ஈ) ரங்பூர்

63. தைமூர் படையெடுப்பின் போது டில்லி சுல்தானில் சுல்தானாக இருவ்தவர் பெயர்?
(அ) தௌலத் கான் லோடி (ஆ) கியாசுதின் துக்ளக்
(இ) பெரோஸ் ஷா துக்ளக் **(ஈ) நஸீருதின் முகமது ஷா துக்ளக்**

64. கீழ்க்கண்டவற்றுள் சிவாஜியின் மிகப்பெரிய சாதனை எது?
(அ) மராத்திய பேரரசின் தந்தை
(ஆ) மொகலாயப் படையை தோற்கடித்தார்
(இ) மிகச்சிறந்த ஆட்சியாளர்
**(ஈ) மொகலாயப் பேரரசின் விரிவாக்கத்தினை தென் இந்தியாவில் தோன்ற செய்தார்**

65. மற்ற அரசர்களுக்கு ஒரு பிள்ளை அல்லது இரண்டு பிள்ளைகள் இருக்கலாம். ஏனக்கோ பல்லாயிரக்ணக்கான பிள்ளைகள் இருக்கின்றனர். அதாவது, அவர்கள் தாம் என்னுடைய துருக்கிய அடிமைகள்; அவர்கள்தாம் என்னுடைய ஆட்சிப் பகுதிகளுக்கு வாரிசுகள்; அப்பகுதிகளில் எல்லாம் என் பெயரை குத்பா (Khutba) அழியா வண்ணம் "பாதுகாப்பர்" என்ற வாக்கியத்தை கூறியது யார்?
(அ) பஹாஹயுத்தீன் குர்ஷப் (ஆ) கஜினியின் மஹ்மூத்
**(இ) ஷிஹாபுத்தீன் முஹம்மத்** (ஈ) குத்புத்தீன் ஐபெக்

66. தேர்தல் ஆணையம் தனது வருடாந்திர அறிக்கையை யாருக்கு சமர்பிக்க வேண்டும்?
(அ) மக்கள் சபை (ஆ) மாநிலங்கள் சபை
(இ) இந்திய பாராளுமன்றம் **(ஈ) இந்திய குடியரசுத் தலைவர்**

67. உள்ளாட்சித் துறை அரசாங்கத்தில் தேர்தல் கட்டாயம் என்று கூறிய சட்டத்திருத்தம்
(அ) 72–வது சட்டத்திருத்தம் **(ஆ) 73–வது சட்டத்திருத்தம்**
(இ) 64–வது சட்டத்திருத்தம் (ஈ) 63–வது சட்டத்திருத்தம்

68. வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடுகளின் பயன்பாடுகள் கீழ்க்காணப்படுபவைகளில் எது/எவை?
1. நெகிழா அரசியலமைப்பு
2. கவர்னர் நியமனம்
3. ஒருங்கிணைந்த நீதித்துறை
(அ) 1, 3 **(ஆ) 1, 2** (இ) 2, 3 (ஈ) மேற்கூறிய அனைத்தும்

69. பலபரிமாண வறுமை குறியீடு கீழ் உள்ள குறிகாட்டிகளில் எவற்றை உள்ளடக்கவில்லை?
(அ) கல்வி **(ஆ) சந்தை** (இ) சுகாதாரம் (ஈ) வாழ்க்கை நிலை

70. "தொலைந்து போன பெண்கள்" – என்பது?
(அ) அதிகபடியான பெண்குழந்தைகள் கருவுறுதலை அளவிடுதல்
(ஆ) அதிகபடியான பெண்கள் குற்றங்களிலிருந்து தப்பிப்பதை அளவிடல்
**(இ) அதிகபடியான பெண்கள் இறப்பு விகிதத்தை அளவிடல்**
(ஈ) அதிகபடியான பெண்குழந்தைகளின் படிப்பின்மையினை அளவிடல்

71. வரி வருமானங்களில் அடங்குவன:
1. வருவாய், செலவுகள் மீது போடப்படும் வரி.
2. சொத்துக்கள் மீது போடப்படும் வரி.
3. பொருள்கள் மீது போடப்படும் வரி.
4. பங்குகள் மற்றும் வட்டிகளின் ரசீது
(அ) 1, 2 மற்றும் 4 **(ஆ) 1, 2 மற்றும் 3**
(இ) 3, 4 மற்றும் 2 (ஈ) மேலே உள்ள அனைத்தும்

72. "இந்தியாவின் பிஸ்மார்க்" என்று அழைக்கப்பட்ட சிறந்த இந்திய தலைவர்
(அ) காந்தி (ஆ) நேரு **(இ) சர்தார் பட்டேல்** (ஈ) இராஜேந்திர பிரசாத்

73. பட்டுகேஸ்வர தத் மற்றும் ------------- மத்திய சட்டசபை மேல் 8 ஏப்ரல் 1929 அன்று குண்டு எறிந்தார்கள்.
(அ) ராம்பிரசாத் (ஆ) ரோஷன் லால் **(இ) பகத்சிங்** (ஈ) ராஜ்குரு

74. சாண்டர்ஸ் படுகொலை வழக்கில், 23 மார்ச் 1931 லாகூர் சிறையில் தூக்கிலிடப்பட்டவர்கள்
1. ராமபிரசாத் பிஸ்மில் மற்றும் லாலா லஜ்பத்ராய்.
2. பகத்சிங் மற்றும் ராஜ்குரு.
3. ரோஷன் லால், ராம்பிரசாத், ஹீசைனிவாலா.
4. பகத்சிங், ராஜ் குரு மற்றும் சுக்தேவ்
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 3 (இ) 2 மற்றும் 3 **(ஈ) 2 மற்றும் 4 மட்டும்**

75. 1லிருந்து 9 வரையிலான அனைத்து எண்களாலும் வகுப்படும் மிகச்சிறிய எண்
(அ) 1260 **(ஆ) 2520** (இ) 5040 (ஈ) 9000

76. மருது பாண்டியனின் தலைமையிடம் எது?
(அ) அறந்தாங்கி (ஆ) ஒக்கூர் (இ) பரமகுடி **(ஈ) சிறுவாயல்**

77. வேலூர் கலகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இராணுவ தளபதி யார்?
(அ) ஜார்ஜ் கார்மிசெல் ஸ்மித் **(ஆ) ரோலோ கில்லஸ்பி**
(இ) ஜான் நிக்கல்சன் (ஈ) வில்லியம் ஹாட்சன்

78. சிறுகதை ஆசிரியர்களை அவர்கள் எழுதிய சிறுகதைகளோடு தொடர்புபடுத்துக

| ஆசிரியர் | சிறுகதை |
|---|---|
| அ. ஜெயகாந்தன் | 1. விடியுமா |
| ஆ. மௌனி | 2. அக்னிப்பிரவேசம் |
| இ. புதுமைப்பித்தன் | 3. ஆழியாச்சுடர் |
| ஈ. கு.ப.ராஜகோபாலன் | 4. சாப விமோசனம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| (அ) | 3 | 2 | 4 | 1 |
| (ஆ) | 3 | 2 | 1 | 4 |
| **(இ)** | **2** | **3** | **4** | **1** |
| (ஈ) | 2 | 3 | 1 | 4 |

79. "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என இறைவன் (சிவன்) யாரிடம் உரைத்தார்?
(அ) சுந்தரர் **(ஆ) மாணிக்கவாசகர்** (இ) ஞானசம்பந்தர் (ஈ) நாவுக்கரசர்

80."லிரிக்" பாடல்கள் என்று எவ்வகைப் பாடல்களைக் குறிப்பிடுகின்றோம்?
(அ) பக்திப் பாடல்கள் (ஆ) வீரயுகப் பாடல்கள்
**(இ) தன்னுணர்ச்சிப் பாடல்கள்** (ஈ) தெம்மாங்குப் பாடல்கள்

81. 1. அவர் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்.
2. வங்காளத்தின் கவர்னராகப் பணியாற்றியவர்.
3. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக 1937–ல் ஆனார்.
மேற்கூறிய கூற்றுக்கள் யாரை விவரிக்கிறது?
(அ) காமராஜர் **(ஆ) இராஜாஜி** (இ) நடேசன் (ஈ) முனுசாமி

82. 1843–ம் ஆண்டு ஆங்கிலேயரால் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதல் நவீன வங்கி
(அ) செட்டிநாடு வங்கி (ஆ) ஆர்புத்நாட் கம்பெனி
(இ) மதுரா வங்கி **(ஈ) மெட்ராஸ் வங்கி**

83. காக்கா கலேல்கர் ஆணையம் எதனோடு தொடர்பு உடையது?
(அ) பட்டியலின ஜாதிக்கான தேசிய ஆணையம்
(ஆ) மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையம்
**(இ) பிற்படுத்தப்பட்டோர் தேசிய ஆணையம்**
(ஈ) ஆங்கிலோ இந்தியருக்கான அமைப்பு

84. இந்திய அரசியலமைப்பில் உள்ள பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பலவீனமான பிரிவுகளின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை ஊக்குவிக்கும் பிரிவை அடையாளம் காணவும்.
**(அ) பிரிவு 46** (ஆ) பிரிவு15 (இ) பிரிவு 334 (ஈ) பிரிவு 342

85. பின்வரும் கூற்றுக்களில் சுய–மரியாதை இயக்கத்தைப் பற்றி சரியானது எது?
(அ) சுய–மரியாதை இயக்கம் என்பது உயர் சாதி இந்துக்களுக்கு எதிரான ஒரு சமூகப்போராட்டம்
**(ஆ) சுய–மரியாதை இயக்கம் சமூக சுதந்திரத்தின் மீதே அதிக ஈடுபாடு கொண்டிருந்தது.**
(இ) சுய–மரியாதை இயக்கம் பெரும்பாலும் நிலமுள்ள வர்க்கத்திற்காகவே முறையிட்டது.
(ஈ) சுய–மரியாதை அரசியல் சுதந்திரத்தை பெறுவதற்காக தோற்றுவிக்கப்பட்டது.

86. ஜவஹர்லால் நேரு தன்னுடைய தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது இந்தியாவின் 90% தீப்பெட்டி பங்களிப்பினை செய்வதால் "சிறிய ஜப்பான்" என்று குறிப்பிட்டது.
(அ) கரூர் **(ஆ) சிவகாசி** (இ) காஞ்சிபுரம் (ஈ) சிவகங்கை

87. பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டு குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையினை அட்டவணை–I மாறிலி) உடன் அட்டவணை–II (அளவுகள்)ஐ பொருத்துக.

| அட்டவணை I | அட்டவணை II |
|---|---|
| அ. அதிக அளவு வருவாய் வளர்ச்சி | 1. கினி குணகம் |
| ஆ. வருவாய் பகிர்வில் பாலினி பாகுபாடு | 2. மொத்த மாநில உள்நாட்டு தலா உற்பத்தி |
| இ. பாலின பிராந்திய ஏற்றத்தாழ்வு | 3. மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| ஈ. அதிக அளவு மொத்த வருவாய் மற்றும் உற்பத்தி | 4. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்திர வளர்ச்சி வீதம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| **ஆ.** | **4** | **1** | **2** | **3** |
| இ. | 4 | 1 | 3 | 2 |
| ஈ. | 2 | 3 | 1 | 4 |

88. ரூ.20, 000 க்கு 15% ஆண்டு வட்டி வீதத்திற்கு 2 1/3 ஆண்டுகளுக்குக் கூட்டுவட்டியைக் காண்க.
**(அ) ரூ.7, 772.50** (ஆ) ரூ.6, 772.50 (இ) ரூ.7, 772 (ஈ) ரூ.2, 777.50

89. 18 மற்றும் 30 ஆகிய எண்களின் மீ.பெ.கா மற்றும் மீ.சி.ம–வின் விகிதம்
(அ) 3 : 5 (ஆ) 15 : 1 **(இ) 1 : 15** (ஈ) 5 : 3

90. BANGALORE என்பதை 123426789 என்று எழுதினால், RANGE என்பதை எழுதும் முறை
(அ) 82934 (ஆ) 82439 **(இ) 82349** (ஈ) 82943

91. BOOK = 43 மற்றும் PEN = 35 எனில் COPY = ?
(அ) 48 (ஆ) 60 **(இ) 59** (ஈ) 79

92. x ன் மதிப்பை காண்க:

| | | |
|---|---|---|
| 4 | 3 | 2 |
| 6 | 9 | 10 |
| 9 | 27 | x |

(அ) 30 (ஆ) 20 **(இ) 50** (ஈ) 54

93. ஒரு மீன் தொட்டியானது 4 மீ x 2 மீ x 3 மீ என்ற அளவுகளை உடையது. இந்தத் தொட்டியானது எத்தனை லிட்டர் தண்ணீர் கொள்ளும்?
**(அ) 24, 000 லிட்டர்** (ஆ) 2, 400 லிட்டர் (இ) 240 லிட்டர் (ஈ) 24 லிட்டர்

94. சதுரத்தின் பரப்பளவும் வட்டத்தின் பரப்பளவும் சமம். வட்டத்தின் ஆரம் 14 செ.மீ. எனில் சதுரத்தின் பக்கத்தின் தோராய அளவு யாது?
(அ) 20 செ.மீ **(ஆ) 25 செ.மீ** (இ) 15 செ.மீ (ஈ) 30 செ.மீ

95. ராம் தம்மிடமுள்ள ரூ.15, 000–ஐ நிரந்தர வைப்புக் கணக்கில் முதலீடு செய்கிறார். ஆந்த வங்கி 4% தனிவட்டி கொடுத்தால் 73 நாட்கள் கழித்து அவருக்கு கிடைக்கும் மொத்த தொகை யாது?
(அ) ரூ.16, 000 (ஆ) ரூ.15, 000 **(இ) ரூ.15, 120** (ஈ) ரூ.15, 000

96. பூச்சட்டி ஒன்றை ரூ.528–க்கு விற்று ஒரு பெண் 20% இலாபம் பெறுகிறார். 25% இலாபம் பெற அவர் அதை என்ன விலைக்கு விற்க வேண்டும்?
(அ) ரூ.500 **(ஆ) ரூ.550** (இ) ரூ.553 (ஈ) ரூ.573

97. 400 ன் 30% மதிப்பின் 25% என்ன?
(அ) 20 **(ஆ) 30** (இ) 40 (ஈ) 50

98. 600–ன் x% என்பது 450 எனில், x–இன் மதிப்பைக் காண்க

(அ) 60 (ஆ) 48 **(இ) 75** (ஈ) 89

99. 7 : 5 ஆனது 25–இக்கு விகித சமம் எனில் x–ன் மதிப்பு

(அ) 3.5 **(ஆ) 35** (இ) 53 (ஈ) 5.3

100. பின்வருவனவற்றிற்கு மீ.பொ.ம. காண்க:

$8x^4y^2$, $48x^2y^4$

(அ) $8x^4y^2$ (ஆ) $48x^2y^4$ **(இ) $48x^4y^4$** (ஈ) $8x^2y^4$

winmeen.com